RICHMOND TAMIL SANGAM
ஒற்றுமையே உயர்வு

# கதம்பம்

ஜூலை 2023 | திருவள்ளுவர் ஆண்டு 2054

## கோடை சிறப்பு இதழ்

என்ன வெயிலு?
110 டிகிரி!!!



# இந்த இதழில்...

(பக்கத்திற்குச் செல்ல தலைப்பைக் கிளிக் செய்யவும்)


03 அறிவிப்பு மடல்

06 சிரிப்பு வந்தால் சிரிங்க!

07 திரையும் இசையும்

08 ஜேம்ஸ் நதிக்கரையி-னிலே

16 கண்ணனின் வைர வரிகள்

17 டென்னிஸ் கோடை முகாம்

19 செங்கோலும் கண்ணீரும்

22 வண்ண விளையாட்டு

24 நன்றி உரை

RTS *Presents*

# DRAWING COMPETITION

## 76TH INDEPENDENCE




On Aug 9th from 6:00 p.m to 8:00 p.m in Twin Hickory Library.

- **Children bring their own art supplies**
- **Art paper will be provided**

| Elementary children: | Middle school : | High school: |
|---|---|---|
| National bird: Peacock Or National flower: Lotus | Parade celebration Or Indian Flag art | Frame a Tamil freedom fighter Or Compare India 1947 to 2023 |

**Pre drawing will not be accepted. Can use all dry color medium. Color pencil, crayons, oil pastels, soft pastels, markers, etc., no liquid based paints.**

**The best 2 drawings on each category will be rewarded. Participants will receive a goody bag.**

# தமிழ்ப்பள்ளி மாணவர் சேர்க்கை



ரிச்மண்ட் தமிழ்ச் சங்க சகோதர சகோதரிகளுக்கு வணக்கம்,

குழலினும் யாழினும் இனிதான உங்கள் பிள்ளையின் மொழி தாய் மொழியில் இருந்தால் பேரின்பம் அல்லவா? அன்னை தமிழை அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்ல  இரிச்மண்ட் தமிழ் பள்ளி அரிய சேவை ஆற்றி வருகிறது.

வரும் கல்வி ஆண்டுக்கான(2023-2024) மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. பள்ளியில் சேர பெற்றோர் RTS உறுப்பினராக இருத்தல் அவசியம்.

கட்டணம் : $180 (Zelle பயன்படுத்தி பணம் செலுத்தவும்)
கீழ்க்கண்டுள்ள படிவத்தை நிரப்பி உங்கள் விவரங்களை எங்களுக்கு தெரிவிக்கவும்.

**https://forms.gle/4EuzXjuZLk3NfK7d7.**

பதிவு செய்ய கடைசி நாள் :  ஆகஸ்ட் 1 2023

பல நிலைகளில் மாணவர்களுக்கு பயிற்றுவிக்க தன்னார்வலர்கள் தயாராக உள்ளனர். விரைவில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

என்றும் உங்கள் சேவையில்
ரிச்மன்ட் தமிழ்ப்பள்ளி

# புதிய குழு

RTS இன் செயற்குழு, துணைச் சட்டங்களை மறுபரிசீலனை செய்வதற்கு ஒரு புதிய குழுவை உருவாக்குவதை அறிவிப்பதில் உற்சாகமாக உள்ளது.

பின்வரும் உறுப்பினர்கள் குழுவில் அங்கம் வகிக்க முன்வந்துள்ளனர்.

**1. சேகர் வீரப்பன் (தலைமை) - முதல் RTS சட்டத்தின் நிறுவன உறுப்பினர்கள் மற்றும் ஆசிரியர்களில் ஒருவர்**
**2. ஶ்ரீலதா சந்தானகோபாலன் - RTS ECயை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்**
**3. லதா தியாகராஜன் - RTS தமிழ் பள்ளியை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்**
**4. சத்தியநாராயணன் ஈஸ்வரன்**
**5. பார்கவி துளசி**

இந்தக் குழு தற்போதைய துணைச் சட்டத்தை மதிப்பாய்வு செய்து, திருத்தியமைத்து, நிலையான செயல்பாட்டு நடைமுறையைத் தயாரிக்கும்.

RTS EC, குழுவின் ஒரு அங்கமாக முன்னேறியதற்கு மேலே உள்ள தன்னார்வலர்களுக்கு தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கிறது.

அன்புடன்,

RTS EC

# சிரிப்பு வந்தால் சிரிங்க

(நொளம்பூர் கண்ணன்)

AB-க்கு போர் அடிச்சா என்ன செய்யும்?

CD- போட்டுப் பார்க்கும்.

EF-க்கு உடம்பு சரியில்லைன்னா எங்கே போகும்?

GH-க்குப் போகும்.

IJKL-க்கு எதிரி யாரு?

MN-(எமன்) தான்.

OP-ரேஷனுக்குப் போனா?

Q-லதான் நிக்கும்

RS-க்கு தலையை வலிச்சா?

T-குடிக்கும்

UVWXYZ-க்கு பறக்கணும்னா?

Z-(ஜெட்)லே போகும்.

எப்படி?

மனைவி: நீங்கள் மூக்குக் கண்ணாடியை கழட்டினால் நன்றாகவே இருக்கிறீர்கள்?

கணவன்: நான் மூக்குக் கண்ணாடியை கழட்டியவுடன் நீ கூட அழகாகத்தான் தெரிகிறாய்.

இப்படிக்கு
நொளம்பூர் கண்ணன்
F/o. K. வெங்கடேஸ்வரன்

# திரையும் இசையும் - கல்யாணி (பாகம் 4)

இது **65** ஆம் மேளகர்த்தா ராகம்.

Arohanam: S R2 G3 M2 P D2 N3 S
Avarohanam: S N3 D2 P M2 G3 R2 S

திரைப்படங்களில், இந்த ராகத்தை தழுவி அமைந்த பாடல்களில் மற்றும் சில:

| திரைப்படம் | பாடல் | இசையமைப்பாளர் |
|---|---|---|
| வேதம் புதிது | புத்தம் புது ஓலை | தேவேந்திரன் |
| பவித்ரா | அழகு நிலாவே | ஏ. ஆர். ரஹ்மான் |
| சங்கமம் | வராக நதிக்கரை ஓரம் | ஏ. ஆர். ரஹ்மான் |
| காதல் வைரஸ் | எந்தன் வானில் | ஏ. ஆர். ரஹ்மான் |
| என் சுவாச காற்றே | காதல் நயாகரா | ஏ. ஆர். ரஹ்மான் |
| பார்த்தாலே பரவசம் | நீதான் என் தேசிய கீதம் | ஏ. ஆர். ரஹ்மான் |
| பாபா | ஷக்தி கொடு | ஏ. ஆர். ரஹ்மான் |
| என் ஆசை ராசாத்தி | காதல் என்னும் கீர்த்தனம் | டாக்டர் சாண்டில்யன் |
| ஆஹா | முதன் முதலில் | தேவா |
| கோகுலத்தில் சீதை | கோகுலத்து கண்ணா | தேவா |
| உன்னருகே நான் இருந்தால் | எந்தன் உயிரே எந்தன் உயிரே | தேவா |
| மொழி | காற்றின் மொழி | வித்யாசாகர் |
| பூவெல்லாம் உன் வசம் | புது மலர் தொட்டு | வித்யாசாகர் |
| கண்டேன் காதலை | நான் மொழி அறிந்தேன் | வித்யாசாகர் |
| லவ் டுடே | ஏன் பெண்ணென்று பிறந்தாய் | ஷிவா |
| தீபாவளி | போகாதே போகாதே | யுவன் ஷங்கர் ராஜா |
| பியார் ப்ரேமம் காதல் | கண்ணே என் கண்களில் | |
| அழகிய தீயே | விழிகளின் அருகினில் வானம் | ரமேஷ் விநாயகம் |
| மறுபடியும் ஒரு காதல் | கண்ணனை தேடி | ஸ்ரீகாந்த் தேவா |
| வாகை சூட வா | சர சர சார காத்து | கிப்ரான் |

தொகுப்பு : நாராயணன் சுப்ரமணியன்

# ஜேம்ஸ் நதிக்கரையினிலே...

## (ஒரு தொடர்)

மறுபதிப்பு



நம் ஊரில் ஒரு சித்தர் இருக்கிறார் தெரியுமா உங்களுக்கு? அவரை நன்கு தெரிந்தவர்களுக்குக்கூட அவருடைய மகிமைகள் தெரியாது. திருவண்ணாமலை பக்கம் சொல்வார்கள் அங்கே மலையைச் சுற்றி பல சித்தர்கள் இருப்பார்களாம். நம் கண்ணுக்கு தெரியமாட்டார்கள், தெரிந்தாலும் அவர்களைப் பற்றி வெளிக்காட்ட மாட்டார்கள். நம்ம ஊர் சித்தர் ஒரு முறை என்னையும் சில நண்பர்களையும் ஒரு மலையடிவாரத்திற்கு அழைத்துச் சென்றார். அங்குதான் எங்களுக்கு தரிசனம் கிடைத்தது...




**மலைச்சித்தர் யார் என்று தெரிகிறதா?**

மலைச்சாமி சங்கத் தலைவராக இருந்தபோது துவக்கிவைத்த பல சங்கதிகளில் ஒன்று கோடை நாட்களில் நம் பிள்ளைகளை எங்காவது மலைப்பக்கம் அழைத்துச் செல்வது.
2015ல்,முதல்முறையாக எங்கே போகலாம் என்று மலைச்சாமி கேட்டபோது நான் தயங்காமல் உடனே சொன்ன இடம்

Crabtree Falls. நம் மாநிலத்தில் எனக்கு மிகவும் பிடித்த இடங்களில் இருப்பவை சாலை எண் 56-ம் அதில் இருக்கும் இந்த அருவியும்.





அமெரிக்காவின் கிழக்குப் பகுதியிலேயே மிகவும் உயரமான அருவித் தொடர் இதுதான் - highest vertical-drop cascading waterfall east of the Mississippi River! இந்த மலைப்பாதையில் போகும்போது அருவி அருகிலேயே வரும். நான் இந்த ஊருக்கு வந்த புதிதில் சாலைக்கு அருகில் ஒரு ஏழெட்டு வாகனங்கள் நிற்குமளவுகுத்தான் இடம் இருந்தது. அங்கிருந்து சற்று தூரம் நடந்து, ஒரு அழகான பழைய பாலத்தில் வழியாகத்தான் அருவியின் அடிவாரத்திற்கு வர முடியும். அமெரிக்க உள்நாட்டுப் போரின் போது உருக்கிய இரும்பை அந்தப் பழைய பாலத்தின் மேலிருந்து கீழே ஆற்றில் சொட்ட விட்டு தோட்டா செய்தார்களாம். இப்போது பெரிய வாகன நிறுத்தமும் கழிப்பறைகளும் கட்டித்தள்ளி, கிட்டத்தட்ட காரிலேயே அருவியின் அருகே போகுமளவிற்கு அந்த இடம் மாறிவிட்டது. சாலை எண் 56-ம் மிக அழகாக இருக்கும். அனைத்துப் பருவக் காலங்களிலும் இந்தச் சாலை அழகோ அழகு. பிள்ளைகள் சிறு வயது முதல் பலமுறை இங்கே சென்றிருக்கிறோம்.

தமிழ்ச்சங்கத்தின் பிள்ளைப் பட்டாளத்துடனான முதல் மலையேற்றம் இது. ஆறேழு பிள்ளைகளும் சில தந்தையர்களும் போயிருந்தோம். கூட என் மனைவியும் ஜாக்கியும் வந்திருந்தார்கள்.



மலையேறும்போது இண்டு இடுக்கில் எல்லாம் பிள்ளைகள் நுழைந்தார்கள். எங்கெல்லாம் தண்ணீரில் இறங்கமுடியுமோ இறங்கினார்கள்.



மலையுச்சியை அடைந்ததும் குளுமையான நீரில் இறங்கி விளையாடினார்கள். நல்ல நிழலில் குளுமையாக ஓய்வெடுத்துக் கொண்டு அங்கிருந்து சுற்றி பசுமையைக் கண்டு களித்தோம். மலைச்சாமிக்கு அந்த இடம் மிகவும் பிடித்துப் போய் விட்டது. இவ்வளவு அழகான இடத்தைப் பற்றி இவ்வளவு நாள் சொல்லவே இல்லையே என்று குறைப்பட்டுக் கொண்டார்.



அப்போது குட்டிப் பையனாக இருந்த விக்னேஷ் ஹரிக்கும் இந்த மலையேற்றம் மிகவும் பிடித்து விட்டது. அதற்கு அடுத்த வாரமே அவன் தெருவில் இருக்கும் நண்பர்களைத் திரட்டிக் கொண்டு அங்கு போய் வந்தான். அடுத்து எங்கு மலையேற்றத்திற்கு போனாலும் அவனை அழைத்துச் செல்ல வேண்டும் என்ற அன்புக் கட்டளையும் போட்டிருக்கிறான். இதுவரை சென்ற அனைத்து மலையேற்றங்களுக்கும் வந்த பிள்ளை அவன் ஒருவன் தான்.



அனைவருக்கும் மலையேற்றம் பிடித்து நாடெங்கிலும் செய்தி பரவ, அடுத்த ஆண்டு அநேகர் மலையேற்றத்திற்கு போகவேண்டும் என்று அடம் பிடித்தனர். ஆகையால் அனைத்து வயதினரும் போக ஏதுவாக தேர்ந்தெடுத்த இடம் Humpback Rocks! நம்மூரில் இருந்து இந்த இடத்தை சற்று விரைவாக எட்டி விடலாம். மலையேற்ற உயரமும் குறைவு. அங்கிருந்து காட்சியும் கொள்ளை அழகு. அதனால் பிள்ளைகள், தாய், தந்தையர்கள் அனைவரும் வரலாம், ஒரு மைல்தான் நடக்க வேண்டிய தொலைவு என்று தண்டோரா போட்டதால், நிறைய பேர் வந்திருந்தனர்.

இங்கு அமெரிக்காவில் ஐரோப்பியர்கள் முதலில் குடியேறிய போது எப்படி வாழ்ந்தார்கள் என்று காட்ட ஒரு வீடும் தோட்டமும் அருங்காட்சியகம் போல வைத்திருக்கிறார்கள். உள்ளே நுழைந்து அந்த வீட்டைப் பார்க்கலாம். பரண் போல மேலே ஏறி அவர்களின் துக்குளியூண்டு படுக்கை அறையையும் பார்க்கலாம்.



அந்த வீட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு மலையடிவாரத்தை நோக்கி நடக்கும்போது நண்பர் செல்வா மலையுச்சியில் இருக்கும் ஒரு பாறை போன்ற அமைப்பை அனைவருக்கும் காட்டிக் கொண்டிருந்தார். நான் அங்கேதான் நாம் போகிறோம் என்றவுடன் ஒரு மைல்னு சொன்னீங்கன்னு சண்டைக்கு வந்தார். ஒரு மைல்தான்பா. செங்குத்தா ஒரு மைல் என்றேன்!

இந்த ஏற்றம் ஒரு மைல்தான் என்றாலும் கொஞ்சம் செங்குத்தான ஏற்றம். அதுவும் பாதி வழி சரளைக் கல் போட்ட பாதை போல ஏற்றமாக இருக்கும். காட்டுப்பாதை போல இருக்காது. அதனால் நடப்பதும் சற்று கடினம். அனைவரும் மிகவும் உற்சாகமாய் நடந்து பல இடங்களில் ஓய்வெடுத்து மகிழ்ந்தார்கள். முதலில் இருக்கும் மலைச்சித்தர் அவதாரமும் அப்போதுதான் நடந்தது. தமிழ்ச் சங்கத்தின் அப்போதைய ஆஸ்தான புகைப்படக்காரரான விஜயநிர்மலா நிறையப் படங்கள் எடுத்துத் தள்ளினார்.



இந்த மலையுச்சியில் இருந்து பார்த்தால் அவ்வளவு அழகு. சுற்றிலும் பச்சைப் பசேல் என்று இருக்கும் மலைகளுக்கு நடுவே இந்த சில செங்குத்துப் பாறைகள் மட்டும் மொட்டையாக நீட்டிக் கொண்டிருக்கும்.



இந்த மலையேற்றத்திற்குப் பிறகு போகவே முடியவில்லை. அதுவும் கோடைக்காலத்தில் அனைவரும் ஒன்று சேர்ப்பது மிகவும் கடினமாகப் போய்விட்டது. நண்பர் சிற்றரசனின் விடா முயற்சியால் 2018ல் White Rock Falls எனும் காட்டுப்பாதையில் பயணித்தோம். நண்பர்கள் நால்வரும், சிறுவன் விக்னேஷ் மட்டும்தான் போனோம்.




வழியெங்கிலும் காட்டாறுகள் நிறைந்த அற்புதமான மலைப்பாதை இது. ஓரிடத்தில் நீரில் இறங்கித்தான் பாதையைக் கடக்க நேர்ந்தது.

**எழுதியவர் - நாகு பரசு**

# என்னை கவர்ந்த சில வைரவரிகள்

(நொளம்பூர் கண்ணன்)

1 வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியையும் மகிழ்ச்சியாக வாழுங்கள் - ஏனெனில் வாழ்க்கை நமக்கு மறுவாய்ப்பு தரப் போவதில்லை.

2. உண்மையைப் பேசுவதில் ஒரு நன்மை உண்டு என்னவென்றால் பேசியதை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை.

3. கொடுப்பவரை ஏழை ஆக்காமல் பெறுபவரையும் செல்வந்தன் ஆக்கும் ஒரே செயல் புன்னகை மட்டுமே.

4 கூட்டத்தில் ஒருவனாக நிற்பது எளிது. ஆனால் தனியாக நிற்கத்தான் தைரியம் வேண்டும்.

5 சாதாரண மனிதர்களிடமிருந்து தான் ஒரு சகாப்தத்தின் விடிவுக்கான ஒளி கிளம்புகிறது.

6. தோல்வியின் அடையாளம் தயக்கம். வெற்றியின் அடையாளம் துணிச்சல். துணிந்தவர் தோற்றதில்லை. தயங்கியவர் வென்றதில்லை.

7. விடிந்த பின்பு நிலவு கண்ணுக்குத் தெரிவதில்லை. அதுபோல் சிலருக்கு உயர்ந்த பின்பு உதவியவர்கள் கண்ணுக்குத் தெரிவதில்லை.

8. உன் கோபம் உன்னை நேசிப்பவர்களை யோசிக்க வைக்கும். ஆனால் உனது அன்பு உன்னை வெறுப்பவர்களையும் நேசிக்க வைக்கும்.

இப்படிக்கு
நொளம்பூர் கண்ணன்
F/o. K. வெங்கடேஷ்வரன்.



# டென்னிஸ் கோடை முகாம்



**அன்புள்ள பயிற்சியாளர்களே,**

குழந்தைகள் கோடைகால டென்னிஸ் முகாமை நடத்தி எங்கள் சமுதாயக் குழந்தைகளுக்கு நீங்கள் வழங்கிய வாய்ப்பிற்கு நன்றி. உங்களின் ஒவ்வொரு முயற்சியும் அவர்களுக்கு டென்னிஸ் மீதான அன்பை அதிகரிக்கச் செய்து, ஆரோக்கியமான மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை ஊக்குவிக்கிறது. உங்கள் முயற்சிக்கும் அர்ப்பணிப்புக்கும் எங்கள் நன்றிகள்.

**-சுமேஷ் சுரேந்திரன்**

**அன்புள்ள தன்னார்வலர்களே,**

எங்கள் குழந்தைகளுக்கான கோடைக்கால டென்னிஸ் முகாமை வெற்றியடையச் செய்வதில் உங்கள் அசைக்க முடியாத ஆதரவிற்கும் அர்ப்பணிப்பிற்கும் எங்களின் மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். உங்களது தன்னலமற்ற பங்களிப்புகள் அவர்களின் டென்னிஸ் திறமைகளை வளப்படுத்தியது மட்டுமின்றி அவர்களின் முகத்தில் புன்னகையையும் மகிழ்ச்சியையும் கொண்டு வந்துள்ளது. இந்த அற்புதமான முயற்சிக்கு உந்து சக்தியாக இருந்ததற்கு நன்றி.

**நன்றி,**

- **மகேஷ் சுகுமாரன்**
- **சித்தார்த் குரு செல்வகுமார்**
- **ஆகாஷ் சுகுமாரன்**

**நன்றி,**

- **லட்சுமி**
- **ரிஷ்வந்த்**
- **பிரணவ்**
- **நிலா**
- **ரித்விகா**


adidas


HILFIGER







# செங்கோலும் கண்ணீரும்



[குறளும் பொருளும்]

**உலகம், மக்கள் நலம் நாடிய மாபெரும் மன்னர்களை மட்டுமல்ல, வழிநெடுகிலும் கொடுங்கோலர்களையும் கண்டே வந்து கொண்டிருக்கிறது.**

**தம் குடிமக்கள் இயல்பாகச் சந்திந்த பிணி- மூப்பு-சாவு எனும் துன்பங்களைத் தம் இளம் வயதில் கண்டு, குழம்பிப் போய், பதவியைத் துறந்து, துன்பத்தில் இருந்து விடுதலைக்கான விடைதேடச் சென்றார் புத்த பிரான். வசதியான அரண்மனை வாழ்வை, அழகிய குடும்பத்தைப் பிரிந்து ஏன் என் குடிமக்கள் துன்பப்படுகிறார்கள்? ஏன் என்னால் மன்னனாக எதும் செய்ய இயலவில்லை? இதற்கு விடை கண்டே தீர வேண்டும் என தன்னைத்தானே வருத்தி, நீண்ட தேடலுக்குப் பின் மெய் அறிந்தார். மனித வாழ்வே மகத்தானது, வெற்று ஆசைகள் அதனைக் குலைத்துப் போடுகிறது, ஆசையே துன்பத்திற்குக் காரணம் என போதித்து மக்களை சிந்திக்கத் தூண்டினார்.**

உலகம் அவரையும் பார்த்தது, அவரைத் தொடர்ந்த அசோகர் போன்ற கருணையாளர்களையும் ஆட்சியாளர்களாகக் கண்டது. மனித உயிர்கள் மட்டுமல்ல, எல்லா உயிர்களும் உன்னதமானவையே என்று அறிவித்து மனித வரலாற்றில் விலங்குகளுக்கும் மருத்துவமனைகளை அமைத்த மென்மனம் கொண்ட மனிதர் அவர்.

புத்தர், அசோகர் போன்றோரை மட்டுமல்ல, ஆசையே உருவாகக் கொண்ட ஆட்சியாளர்களும் வந்த வண்ணமே இருக்கிறார்கள். அவர்கள் கையில் சிக்கிய செங்கோல் வளைந்து கொடுங்கோலாக மாறி மக்களை வதைக்கும் சூழல்களும் வரலாறு பார்த்துதான் வருகிறது. தமிழில் "கொடு" என்ற சொல்லுக்கு "வளைதல்" என்று ஒரு பொருள் உண்டு. கடமை தவறி, அறவழியில் இருந்து வளைந்து போன செங்கோல், வளைந்தகோல் = கொடு+கோல் = கொடுங்கோல் என்றாகிறது.
கோல் என்பது ஆட்சி - குச்சி அல்ல.

நிற்க. தலைப்புக்கு வருவோம்.

ஐயன் வள்ளுவர் இக்கொடுங்கோலர்களை நோக்கி அரசியல் எனும் இயலில் "கொடுங்கோன்மை" என ஒரு முழு அதிகாரம் ஒதுக்கி எச்சரித்துத் தள்ளுகிறார்.

அந்த பத்து குறட்பாக்களில் ஒன்று இயலாமையில் கண்ணீர் சிந்தும் குடிமக்களைக் குறிக்கிறது. ஆட்சியாளர் பெரும் வலிமையோடு அதிகாரத்தில் அமர்ந்து இருப்பவராக இருக்கலாம். எதிர்க் குரல்கள் ஓசையின்றி அமைதியாக்கப்படலாம். குடிமக்கள் எதுவும் செய்ய முடியாத இயலாமைச் சூழலில் தள்ளப்பட்டிருக்கலாம். ஆனால், அந்தக் குடிமக்கள் ஆற்ற முடியாத துன்பத்தில் சிந்தும் கண்ணீர், சிறுகச் சிறுகவேனும் ஆட்சியாளரின் வலிமை, அதிகாரம், செல்வாக்கு என எல்லா செல்வத்தையும் தேய்த்து அழிக்கும் கருவியாகிவிடும் என எச்சரிக்கை ஒலிக்கும் குறள்.

# அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை

அல்லல்பட்டு = துன்பப்பட்டு
ஆற்றாது = தாள முடியாமல்
அழுத கண்ணீர் அன்றே = அழுத கண்ணீர் அல்லவோ
செய்வத்தை = ஆட்சி, அதிகாரம் எனும் செல்வத்தை
தேய்க்கும் = சிறுகச் சிறுக அழிக்கும்
படை = கருவி


எந்த ஆட்சியாளரும் எவ்வளவு வலிமையானவராகத் தோற்றமளித்தாலும், குடிமக்கள் கண்ணீர் சிந்தும்படி ஆண்டால் அவரது எல்லா செல்வமும் தேய்ந்து அழிந்து போகும் என எந்த நாட்டுக்கும், எந்தக் காலத்துக்கும் பொருந்தும் படியாக ஒலிக்கும் எச்சரிக்கை மணிக் குறள்.

-உள்ளூர்காரன்



# வண்ண விளையாட்டு

**கீழே குறிப்பிடப்பட்டுள்ள படிப்படியான வரைபடத்தைப் பின்பற்றி ஒரு தர்பூசணியை வரையவும்.**



**உங்கள் வரைபடம் அடுத்த மாத செய்திமடலில் வெளியிடப்படும். அதற்கு, உங்கள் புகைப்படம் மற்றும் பெயருடன் செய்திமடல் மின்னஞ்சல் ஐடிக்கு உங்கள் முடிக்கப்பட்ட வரைபடத்தைப் பகிரவும்.**

-சிவசக்தி அறிவுக்கண்ண


















































# OUR PROUD SPONSORS

# நன்றி உரை

கதம்பம் இதழில் தங்கள் கதை, கட்டுரை, கவிதை மற்றும் பல பயனுள்ள விஷயங்களை இரிச்மண்டு சமூகத்துடன் பகிர்ந்து கொண்ட அனைத்து  எழுத்தாளர்களுக்கும் தமிழ்ச்சங்க நிர்வாக குழுவின் மனமார்ந்த நன்றிகள்.

All submissions for Kadambam/கதம்பம் should be emailed to newsletter.rts@richmondtamilsangam.org by
the **15th** of each month.

இந்த மாத கதம்பம் இதழைப் பற்றிய உங்கள் கருத்தை தெரிவிக்க விரும்பினால், இந்த  படிவத்தின் மூலம் எங்களுக்கு தெரிவிக்க வேண்டுகிறோம்.

newsletter.rts@richmondtamilsangam.org எனும் மின்னஞ்சலிலும் எங்களை தொடர்பு கொள்ளலாம். நன்றி!



வாழ்க தமிழ்! வளர்க தமிழ் மக்கள்!

இப்படிக்கு,
சிவசக்தி அறிவுக்கண்ணன்,
செய்திமடல் இயக்குனர்.

## website:

www.richmondtamilsangam.com

## contact us:

richmondtamilsangam@gmail.com
newsletter.rts@richmondtamilsangam.org
tamilschool@richmondtamilsangam.org